[12th December 1961

(இ) ஒவ்வொரு பிரிவிலும் எத்தனை மாணவர்கள் சேர்ந்துள்ளனர் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அ) (i) Tele-communication Engineering Course was started in 1945–46.

(ii) Mining Engineering Course was starting in 1957–58.

(இ) The Present strength in Tele-Communication Branch is 30 and that in the Mining Engineering Branch is 14.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இடையிலே இந்த இரண்டு பிரிவுகளும் சிறிது காலம் நடைபெறாத அளவுக்கு நிறுத்தப்பட்டது உண்மையா ? அதற்கான காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 1960-61-ல் நிறுத்தப்பட்டது. ஏனென்றால் ஒரு மாணவன்கூட இந்தப் பகுதியை எடுத்துக்கொள்ளவில்லை. அதனால் நிறுத்த வேண்டியிருந்தது.

Tanks in Thanjavur district (renovation)

*2244 *Q.*—SRI N. K. PALANISAMI (on behalf of SRI A. R. MARIMUTHU) : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-61-ல் தஞ்சை ஜில்லாவில் எத்தனை ஏரி குளங்கள் மராமத்து செய்யப்பட்டன ?

(இ) அவைகளின்மூலம் எவ்வளவு ஏக்கர் நிலங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன ?

(உ) எத்தனை ஏக்கர் நிலங்களில் கோடைசாகுபடி செய்யப்படுகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 186.

(*b*) & (*c*) Particulars are being collected and will be placed on the table of the House as soon as possible

Overbridges on railway lines

*2245 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government has submitted any proposal to the Centre for the construction of overbridges and sub-ways on railway lines; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The attention of the Hon. Member is invited to the papers [a] placed on the table of the House and he is informed that in view of the limited funds available for Road works the question of revising the lists of schemes relating to the construction of over/under bridges is under considelation.

---

[a] Printed as Appendix IV on pages 600–606 infra.

12th December 1961]

SRI N. K. PALANISAMI: ஸார், மேஜையின் மேல் வைத்திருக்கக் கூடிய லிஸ்டில் கோடம்பாக்கம் பாலம் கட்டுவது பற்றி ஒன்றும் காணோம். வெகு நாளாக சென்னை நகரம் பூராவிலும் இதைக் கட்டவேண்டுமென்ற கிளர்ச்சி இருப்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியும். அப்படி இருக்கும்போது இது சேர்க்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எந்தெந்த பாலங்கள் கட்டப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கோடம்பாக்கம் பாலம் அவசரமும் அவசியமும் வாய்ந்த ஒரு பாலம் தான். வேண்டிய நிதி கிடைக்காததால் தாமதப்பட்டு வருகிறது. ஆனால் ஸ்டேட் ஹவுஸிங் போர்டு தங்களிடம் இதைக் கட்டுவது ஒப்படைக்கப்பட்டால் பாதிச் செலவை ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதைக் கட்டுவதற்கு நகரசபை மூன்றில் ஒரு பங்கு கொடுக்கவேண்டும், சர்க்கார் மூன்றில் ஒரு பங்கு கொடுக்கும். இதெல்லாம் இப்போது பரிசீலனையில் இருக்கிறது. ஹவுஸிங் போர்டு பாதிச் செலவை ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியிருப்பதால் இது சீக்கிரம் எடுத்துக்கொள்ளப்படும் என்று நினைக்கிறேன். திருவொற்றியூரில் பாலம் கட்டப்பட்டு வருகிறது. இப்போது ஹைக்கோர்ட்டுக்கு அருகில் ஓவர் பிரிட்ஜு கட்டுவதாக இருந்தது மாறி இப்போது ஒரு ஸப்-வே கட்டப்படும்.

* 2246 *Q*.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state the reason for the delay in the construction of an overbridge near the High Court in Madras City

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The Government had under consideration for some time past the question whether an over-bridge or a sub-way might be constructed in lieu of the level crossing at the Light House Road. After a series of conferences, it was finally decided recently that a sub-way might be constructed. The detailed plans and estimates in respect of the scheme are being finalised.

SRI N. MARUDACHALAM: கோவை நகரில் ரெயில்வே ஓவர் பிரிட்ஜ் கட்டுவதைப் பற்றி கோவை நகரசபை சர்க்காருக்கு தாக்கீது செய்திருக்கிறதா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? மத்திய சர்க்காரிலிருந்து அதற்கு எவ்வளவு தொகை நமக்குக் கிடைக்கும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: நாஷனல் ஹைவேஸாக இருந்தால் தான் மத்திய சர்க்காருடைய பரிபூர்ண உதவி கிடைக்கும். மற்றப்படி கடன் தான் கொடுப்பார்கள். இதில் நகர சபையாரும் ஒரு பங்குச் செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர்களுடைய நிதி நிலைமை அனுமதிக்கவில்லையென்றால் தாமதம் ஆகின்றது.